தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கின்ற இந்தத் திருத்தச் சட்டத்தை நான் எதிர்க்கின்ற நேரத்திலே, இந்தச் சட்டத் திருத்தம் தேவையில்லாமல்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே வரியில் ''எதிர்க்கிறேன்'' என்று சொல்லுங்கள் : அவ்வளவுதான். (குறுக்கீடு) ஒரே வரியில் தான் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) ''அறிமுக நிலையிலே எதிர்க்கிறேன்'' என்று சொல்லுங்கள் அல்லது அடுத்த நிகழ்ச்சிக்குப் போகட்டுமா ?

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன் என்று தெரிவித்து இந்தச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி ;

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. அறிவிப்பு.

பேரவை அலுவல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 31–3–1990 ஆம் நாள் அன்று டில்லியில் நடக்க இருக்கின்ற பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் தேசிய மாநாட்டில் தான் கலந்துகொள்ள வேண்டி இருப்பதாக மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்து உள்ளார். அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 31–3–1990 அன்று எடுத்துக்கொள்ள வேண்டிய ''பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்'' பற்றிய மானியக் கோரிக்கை 29–3–1990 ஆம் நாள் அன்றும், 29–3–1990 ஆம் நாள் அன்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய கீழ்க்கண்ட மானியக் கோரிக்கைகள் 31–3–1990 ஆம் நாள் அன்றும் எடுத்துக்கொள்ளப்படும்.

31–3–1990 ஆம் நாள் அன்று எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவை; ''சின்கோனா, காட்டுவளத் துறை, செய்தி-சுற்றுலாத் துறை, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.''

6. வரவு-செலவுத் திட்டம், 1990-91 —பொது விவாதம்—(தொடர்ச்சி).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 1990–91 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையிலே என்னுடைய கருத்துக்களையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

10-20 மணி

நாம் சுதந்திரம் பெற்று வெகு நாட்களாகி விட்டது. 43 வருடங்கள் ஆகிவிட்டன. இந்த நாட்டினுடைய வளர்ச்சி எவ்வளவு குறைவாக இருக்கிறது என்பதையெல்லாம் நாம் அனுமானிக்க வேண்டும். வளர்ச்சியே இல்லை. எந்தத் துறையிலேயும் நாம் வளர்ச்சி அடையவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்களுடைய தேவையை